

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
எண்: 21/11, 1வது பிரதான சாலை, கற்பகம் தோட்டம், அடையாறு, சென்னை-600 020.
தொலைப்பேசி : 044 -2848 1235

டிடிவி தினகரன்
பொதுச்செயலாளர்

"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 21.04.2026

**மக்கள் விரோத திமுகவை வீழ்த்தி தமிழக மக்களுக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்திடுவோம்!**
**அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நல்லாட்சியை தமிழகத்தில் அமைத்திடுவோம்!!**

**மனிதநேயத்தின் சிகரமாகவும், மனிதாபிமானத்தின் சின்னமாகவும் போற்றப்பட்டு, நாடி வருவோருக்கு இல்லையெனச் சொல்லாமல் வாரி வழங்கி ஏழை, எளிய மக்களின் இதயக் கோயில்களில் நிரந்தரமாகக் குடியிருக்கும் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர வேண்டும், இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற உயரிய லட்சியத்தோடு நாடு போற்றும் நல்ல பல மக்கள் நலத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்திய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, தமிழக மக்கள் அனைவருக்கும் ஓர் வேண்டுகோள்...**

திமுகவின் கடந்த ஐந்தாண்டுக் கால இருண்ட ஆட்சியில், தமிழகம் இதுவரை கண்டிராத மோசமான நிலையை அடைந்திருக்கிறது. சாதாரண பொதுமக்கள் தொடங்கி, அரசியல் கட்சித் தலைவர்கள் வரை யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது.

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் தொடங்கி கடைக்கோடி கிராமங்கள் வரை சர்வசாதாரணமாகப் புழங்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் பள்ளி, கல்லூரி மாணவர்களும், இளைஞர்களும் தங்களின் எதிர்காலத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். பச்சிளம் குழந்தைகள் முதல் பள்ளிக்குச் செல்லும் சிறுமிகள், கல்லூரி பயிலும் மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள், வீட்டில் தனியாக இருக்கும் முதியவர்கள் என அனைத்து தரப்பினருமே அச்ச உணர்வுடனேயே வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

**கொடூரக் கொலைக் குற்றவாளிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடும் குரூர மனம் படைத்தவர்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்யும் கும்பல்கள், சட்டவிரோதமாக கனிம வளங்களை கடத்துவோர், கள்ளச்சாராயம் மற்றும் கள்ளத் துப்பாக்கிகளை பதுக்கி வைத்து விற்பனை செய்வோர் என சட்டவிரோதிகளும், சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளும் சுதந்திரமாக நடமாடும் தமிழகத்தில், சட்டம்—ஒழுங்கை பேணிக் காத்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய காவல்துறை, தன்னுடைய பொறுப்பையும் கடமையையும் செய்ய விடாமல், திமுகவின் ஏவல் துறையாகவும் கைப்பாவையாகவும் செயல்படுவதால், அனைத்து தரப்பு மக்களின் உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.**

பள்ளி மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பொறுப்புமிக்க பள்ளிக் கல்வித்துறை, ஆசிரியர்களின் காலிப்பணியிடங்களைக் கூட நிரப்பாமல், பள்ளிகளில் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தாமல், சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி பாழடைந்து காட்சியளிக்கிறது.



பொதுமக்களின் உயிரை பாதுகாக்கும் மகத்தான பணியில் ஈடுபட வேண்டிய சுகாதாரத்துறை, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை, மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு ஆகியவற்றால், கைபேசி வெளிச்சத்தில் தூய்மைப் பணியாளர்கள் சிகிச்சை அளிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதுபோல் உள்ளது.

**இழந்த பொருளாதாரத்தை மீட்கிறோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த திமுக, வாங்கிய கடன் மட்டும் ஐந்து லட்சம் கோடி ரூபாயைக் கடந்துள்ளது. நாடு சுதந்திரமடைந்த பின்பு நடைபெற்ற ஒட்டுமொத்த ஆட்சிக்காலத்தில் பெற்ற கடனை, ஐந்தே ஆண்டுகளில் வாங்கிக் குவித்த திமுகவால், தமிழ்நாட்டின் நிதிநிலை அதலபாதாளத்திற்கு சென்றுள்ளது.**

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் சுமார் 4 லட்சம் ரூபாய் கடன் சுமத்தப்பட்டுள்ளது. ஒருபுறம் வரிகளையும் கட்டணங்களையும் பன்மடங்கு உயர்த்திய பின்னரும், காலியான நிலையில் இருக்கும் கருவூலம்; மறுபுறம், அரசுத் துறைகளின் அடிமட்டம் தொடங்கி மூத்த அமைச்சர்கள் வரை ஊழல் மற்றும் முறைகேடு புகார்கள் நிலவி வருவதால், ஒட்டுமொத்த அரசு நிர்வாகமும் திறனற்ற நிலையில் முடங்கிக் கிடக்கிறது.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, ஆட்சிக்கு வந்தால் தமிழகமெங்கும் தேனாறும் பாலாறும் ஓடும் எனப் பேசிய திமுக, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் தமிழக மக்களை பல்வேறு வழிகளில் துன்புறுத்தி, அவர்களை கண்ணீர் ஆற்றில் மிதக்கச் செய்துள்ளது. சாதாரண பொதுமக்கள் தொடங்கி மாணவர்கள், விவசாயிகள், தூய்மைப் பணியாளர்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவுப் பணியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து மற்றும் மின்வாரிய ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள், தொழில்துறையினர் என அனைத்து தரப்பினரும், ஜனநாயகம் தங்களுக்கு வழங்கியிருக்கும் உரிமையான போராட்டத்தைக் கூட நடத்த முடியாத அளவிற்கு திமுகவின் சர்வாதிகாரப் போக்கால் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர்.





**திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஐந்து ஆண்டுகளில், அனைத்து வழிகளிலும் தமிழக விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர். மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களுக்கான இழப்பீட்டைப் பெறுவதற்கே விவசாயிகள் பெரும் பாடுபட வேண்டியிருந்தது.**

காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என கர்நாடக காங்கிரஸ் அரசும், முல்லைப் பெரியாற்றில் புதிய அணையை எழுப்பியே தீருவோம் என கேரள கம்யூனிஸ்ட் அரசும், கங்கணம் கட்டி செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், திறனற்ற திமுக, தாங்கள் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற ஒற்றை எண்ணத்தில், கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை நாடி, மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்துள்ளது. அதன் காரணமாக, அண்டை மாநிலங்கள் தமிழகத்தின் எல்லைப் பகுதிகளை கபளீகரம் செய்யும் அளவிற்கு இறங்கிவிட்டன.

**ஆவின் நிர்வாகத்தில் பால் கொள்முதலில் ஊழல், நகராட்சி நிர்வாகத்துறையில் பணிநியமனத்திற்கு லஞ்சம், சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் பணிகளில் முறைகேடு, கனிமவளக் கொள்ளை, தரமற்ற பாலங்கள் கட்டியதில் ஊழல், டாஸ்மாக் நிர்வாகத்தில் பாட்டிலுக்கு பத்து ரூபாய் ஊழல் என, ஊழலின் ஊற்றுக்கண் திமுகதான் என்பதைக் கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சி நிகழ்கால சாட்சியாக அமைந்திருக்கிறது.**

அரசுத் துறைகளில் நிலவும் காலிப் பணியிடங்களை நிரப்புவோம், ஆண்டுக்கு பத்து லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என வாக்குறுதியளித்த திமுக, அரசுப் பணிக்கான தேர்வுகளைக் கூட முறையாக நடத்த முடியாமல், லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலக் கனவோடு விளையாடிக் கொண்டிருக்கிறது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு, முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் என விளம்பரங்கள் வருகிறதே தவிர, அதனால் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் மற்றும் உருவான வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்கள், சம்பந்தப்பட்ட துறையமைச்சர் காண்பித்த வெற்று காகிதமாகவே உள்ளன. மாநிலத்திற்குத் தேடி வரும் முதலீடுகளைக் கூட தக்க வைத்துக் கொள்ள முடியாமல், தமிழகத்தில் தொழில் தொடங்க ஒப்புக் கொண்டதாக கூறப்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள், திமுக ஆட்சியின் அவலங்களை கண்டு, தங்கள் முடிவை மாற்றி அண்டை மாநிலங்களை நோக்கி நகர்ந்துவிட்டன.

**அரசியலமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவு நீக்கத்தில் தொடங்கி, மத்திய அரசு எந்தச் சட்டத்தை கொண்டு வந்தாலும், எத்தனை மக்கள் நலத் திட்டங்களை அறிவித்தாலும், அவற்றை ஆராயாமல் கண்மூடித்தனமாக எதிர்ப்பதையே தன்னுடைய கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. அண்மையில், மகளிருக்கு அரசியல் அதிகாரத்தையும் அங்கீகாரத்தையும் வழங்கும் வகையில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்து வாக்களித்து, வரலாற்றுப் பிழையை செய்த திமுக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை மகளிர் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.**

மக்கள் நலனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயல்படவேண்டிய அரசு, ஒரு குடும்பத்தின் நலனை மட்டுமே மையமாகக் கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளையும் வீணடித்திருக்கிறது. தன்னுடைய தோல்வி பயத்தை மறைக்கவும், மக்களை மத்திய அரசுக்கு எதிராக திசை திருப்பவும், திமுக அரங்கேற்றும் நாடகங்கள் இனி ஒருபோதும் தமிழக மக்கள் மத்தியில் எடுபடப்போவதில்லை. தமிழகம் முழுவதும் மக்கள் மத்தியில் மிகப்பெரிய எழுச்சி அலை உருவாகியிருக்கிறது. அந்த எழுச்சி அலை சட்டமன்றத் தேர்தலில் திமுகவை வீழ்த்தி நம் அனைவருக்கும் உணர்த்தப் போகிறது.

வாக்குப்பதிவுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், குறுக்கு வழியை பயன்படுத்தி ஆட்சிக்கு வரத் துடிக்கும் கேடுமதி கொண்ட அரசியல் எதிரிகள் எத்தனை சூழ்ச்சி செய்தாலும், அவை அனைத்தையும் தவிடுபொடியாக்கி, தமிழகத்தில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியை மீண்டும் ஏற்படுத்திட நாம் அனைவரும் உறுதியேற்றிடுவோம்.

தமிழகத்தில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் தங்களின் பொன்னான ஆதரவை அளித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்திட வேண்டும் என தமிழக மக்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திமுகவின் வீழ்ச்சி... தமிழகத்தின் எழுச்சி!

டிடிவி தினகரன்